**பண்டாரவளை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைசமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 18 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூலை 15 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூன் 17 ஆம் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து பண்டாரவளை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்குச் சொந்தமான முத்திரை வரி வருமானம் ரூபா 14,845,437 ஆக இருந்த போதும் அதனை ரூபா 15,228,052 ஆக கணக்கிடப்பட்டிருந்தது. | சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் சரி பண்ணுகின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டுடன் தொடர்பான அறவிட வேண்டிய நீதிமன்ற தண்ட பணம் ரூபா 3,584,225 ஆக இருந்த போதும் அதனை ரூபா 3,624,237 ஆக கணக்கிடப்பட்டிருந்தது. | சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் சரி பண்ணுகின்றேன். |
| (iii) | மீளாய்வாண்டுடன் தொடர்பான நிலையான வைப்பு வருமானம் ரூபா 1,717,276 ஆக இருந்த போதும் அதனை ரூபா 2,235,097 ஆக கணக்கிடப்பட்டிருந்தது. | சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் சரி பண்ணுகின்றேன். |
| (iv) | மீளாய்வாண்டின் இறுதித் திகதிக்கு நிலுவை வட்டி வருமானம் ரூபா 379,074 ஆக இருந்த போதும் அதனை ரூபா 451,465 ஆக கணக்கிடப்பட்டுள்ளது. | சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் சரி பண்ணுகின்றேன். |
| (v) | நிலையான சொத்திற்கு உள்ளடக்கப்பட வேண்டிய ரூபா 1,235,216 பெறுமதியான 16 வகைக்குச் சொந்தமான 86 வகையான பொருட்கள் நடைமுறை சொத்துக்குள் இருப்பாக காட்டப்பட்டுள்ளது. | சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் சரி பண்ணுகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | மீளாய்வாண்டின் ஒப்பந்தத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 500,000 முற்பணம் அந்த வேலை முடிவடைந்திருந்த போதிலும் மூலதன செலவினமாக கணக்கீடு பண்ணாமையால் மூலதன செலவினம் ரூபா 500,000 பெறுமதியால் குறைத்து காட்டப்பட்டுள்ளது. | சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் சரி பண்ணுகின்றேன். |

**(ஆ) கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 8,754,170 பெறுமதியான காணி மற்றும் கட்டிட மீதிக்கான உறுதிப்பத்திரம், மாற்றல் கட்டளைகள், வரைபடம் மற்றும் விரிவான இணைப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகள் உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் சமா்ப்பிக்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான மொத்த காணி மற்றும் கட்டடம் சரியான முறையில் உள்ளீர்ப்பு செய்யாமையினால் மற்றும் வருட விலைமதிப்பீட்டு செய்முறையின் தாமதத்தினால் சரியான விலை மதிப்பீட்டு தொகை பதிவேட்டில் உள்ளடக்க முடியாமல் போனது. இது சம்பந்தமாக அந்த பகுதியின் படி இந்த பிரச்சனைனையை தீர்க்க முடியும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நிதி ஒழுங்கு விதி 396 | 06 மாதத்திற்கு மேலதிகமான மாற்றப்படாத காசோலைகள் ரூபா 35,470 பெறுமதியான 11 காசோலை சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமானங்களின; பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதி ஒழுங்கு விதி 571(3) | ரூபா 3,321,570 பெறுமதியான 23 வைப்புக்கள் மேற்கொண்டு 02 வருடங்களுக்கு மேலதிகமாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமானங்களின; பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,746,035 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டு வரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,342,374 தொகையாக இருந்தது.

**2.2 நிதிசார் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு அதிகமான காலத்திலிருந்து வங்கி இணக்கக்கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்து வசூலிக்கப்படாத காசேட்டில் திருத்தம் செய்யப்பட்ட ரூபா 59,635 பெறுமதியானதும் மற்றும் வங்கி கட்டணம் ரூபா 47,430 உம் இனங்கண்டு குறிப்பிட்ட திருத்தம் செயற்படவில்லை. மற்றும் இது சம்மந்தமான தகவல் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கி இணக்கக்கூற்றில் காட்டப்பட்ட திருத்தம் செய்ய வேண்டிய விடயம் குறிப்பிட்ட கணக்கிற்கு திருத்தம் செய்ய வேண்டும். வங்கி கணக்கில் மீதியை உறுதிப்படுத்திய தகவல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. |

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரியும் வரியும் | 282,000 | 538,830 | 535,981 | 2,849 | 274,000 | 274,000 | 458,492 | 860,060 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 450,000 | 450,000 | 430,150 | 19,850 | 500,000 | 500,000 | 449,650 | 50,350 |
| (iv) | ஏனைய வருமானம் | 15,230,000 | 14,973,170 | 7,708,540 | 7,264,630 | 6,400,000 | 6,400,000 | 17,589,104 | 4,255,271 |
| | மொத்தம் | 15,962,000 | 15,962,000 | 8,674,671 | 7,287,329 | 7,174,000 | 7,174,000 | 18,497,246 | 5,165,681 |

### 2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டு வருடத்திற்கு மேலாக காணப்பட்ட நிலுவை வருமானம் ரூபா 37,684,507 மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

### 2.3.3 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிட வேண்டிய நிலுவை ரூபா 2,836,128 பெறுமதியான நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 25,119,722 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | எல்லா இணைப்புக்களும் மாகாண உள் திணைக்கு வழங்கியுள்ளோம். காசு விடுவிப்பதில் தாமதம் ஏற்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச் சேவைகள், பொதுவழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் 126 பந்தியின் பிரகாரம் 30 நோக்கம் செய்வதற்கு உபவிதிகள் செய்யப்பட வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 07 நோக்கங்களுக்காக உபவிதிகள் செய்யப்பட்டது அல்லது உள்ளீர்ப்பு செய்யப்படவில்லை. | உபவிதிகள் செய்யாத காரணத்திற்காக உபவிதிகள் செய்யப்பட வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. |

### (ஆ) நிலை பேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை ஐக்கியநாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக் கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும் | பதில்கள் வழங்கப்படவில்லை. |

## 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2 வருடத்திற்கு மேலான காலத்திலிருந்து காணப்பட்ட ரூபா 9,517,239 பெறுமதியான செலவு மீதி மீளாய்வாண்டிலும் தீர்ப்பனவு செய்யவில்லை. | தீர்ப்பனவு செய்ய வேண்டிய நிலுவை தீர்ப்பனவு செய்ய வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சபை 03 பதவி சம்பந்தமான 03 வெற்றிடம் நிரப்பப்படவில்லை. | வெற்றிடம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | குறிப்பிட்ட வெற்றிடம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இருந்த போதும் முகாமைத்துவ உதவியாளர், அலுவலக உதவியாளர்களின் கடமைகளை மேற்கொள்ள வேறு அலுவலர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மற்றும் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர் பாடசாலை வெற்றிடத்திற்கும் இதுவரைக்கும் முன்பள்ளி ஆரம்பிக்கப்படாமையால் அதனை நிரப்ப தேவை இல்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் XXIV அத்தியாயம் 4 வது பந்திப் பிரகாரம் வேலையில் இருந்து விலகியோர், வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டோர், மாற்றம் ஆகிய 51 அலுவலர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 503,857 பெறுமதி ஊழியர் கடன் தொகை அறவிடப்படவில்லை. | அறவிட வேண்டிய நிலுவை கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டுநிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 1 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வு அலகுடன் கதைத்து 1 காலாண்டிற்கு ஒன்றாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டம் நடாத்த நடவடிக்கை எடுக்கவுள்ளோம். |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு செய்யப்பட வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை |